
## மருத்துவ சேவை வழங்குவதிலும் – மக்களின்

# உடல்நலனைக் காப்பதிலும் தமிழ்நாடுதான் ‘நெம்பர் 1’

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, ஆக.25-

“நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்கள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2.8. 2025 அன்று சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்கு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மன நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில்,

**ஆகஸ்ட் 2 தொடங்கி, சனிக்கிழமைதோறும் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களில் இதுவரை 3 வாரங்கள் நிறைவுற்றுள்ளன.**

**முதல் வாரம் ( ஆகஸ்ட் 2) 44,795 மருத்துவப் பயனாளிகள்**

**இரண்டாம் வாரம் (ஆகஸ்ட் 9) 48,046 மருத்துவப் பயனாளிகள்,**

**மூன்றாம் வாரம் (ஆகஸ்ட் 23) 56,245 மருத்துவப் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.**

**மருத்துவ சேவை வழங்குவதிலும் மக்களின் உடல்நலனைக் காப்பதிலும் தமிழ்நாடுதான் ‘நம்பர் 1’ என உறுதிசெய்வோம்!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முzந்தினம் (23.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் மகள் திருமதி பிரபாராணி மற்றும் குடும்பத்தினர், தேவேந்திரர் பண்பாட்டு கழகத்தின் தலைவர் பாலன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளவுள்ள, தியாகி இமானுவேல் சேகனாரின் 68வது வீரவணக்க நாள் விழா அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், இ. ராஜா, திருமதி தமிழரசி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

## கல்வியிலும் உயரும் திராவிட மாடல் அரசு!

# திருவாரூர் - குடவாசலில் புதிய கல்லூரிக் கட்டிடம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார்!



திருவாரூர், ஆக. 25 -

**திருவாரூர் - குடவாசலில் அமைந்துள்ள அரசுக்கல்லூரிக்கு, தமிழ்நாட்டின் முதல்வர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று காணொளி வாயிலாக திறந்து வைக்கிறார்.**

திருவாரூர் மாவட்டம் குடவாசலில் கடந்த 2017-ஆம் ஆண்டு அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்பட்டது.

தொடர்ந்து எட்டு ஆண்டு களாக இந்த கல்லூரி குடவாசல் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தான் கல்லூரி இயங்கி வந்தது.

எம்.ஜி.ஆர். பெயரில் கல்லூரியை தொடங்கிய அ.தி.மு.க. அரசு, கல்லூரிக்கு தேவையான கட்டிடங்களை கட்டுவதற்கு எந்த வித முனைப்பும் காட்டாமல் இருந்தது. இது குறித்து கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலமுறை போராட்டம் நடத்தியும் அப்போதைய அ.தி.மு.க. அரசு கல்லூரி கட்டுவதற்கு எந்தவித முயற்சி எடுக்காமல் இருந்தது. இதனால் ஒரே இடத்தில் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் பயிலக்கூடிய அவலம் நிகழ்ந்து இருந்தது.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தொடக்க .கல்வி உயர் கல்வி இவைகளில் இந்திய அளவில் தமிழ் நாட்டை முதலிடத்திற்கு கொண்டு செல்லும் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மக்களின் பேராதரவோடு அமைந்தது.

திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் தொடர் முயற்சியால் தமிழ்நாடு முதல்வரின் வழிகாட்டுதல்களின் படி இக்கல்லூரிக்கு புதிதாக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. புதிதாக கல்லூரி கட்டிடம் கட்டுவதற்காக தி.மு.க. மாவட்டச் செயலாளரும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் ரூ.25 லட்சம் மதிப்பிலான தனக்கு சொந்தமான இடத்தை கல்லூரி கட்டிடம் கட்டுவதற்கு அரசுக்கு தானமாக பத்திரப்பதிவு செய்து கொடுத்திருந்தார்.

இதையடுத்து அந்த இடத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் கடந்த ஆண்டு கட்டிடம் கட்டும் பணி தொடங்கியது. இந்த கட்டிடத்தில் 14 வகுப்பறைகளும், 3 ஆய்வகமும், ஒரு நூலகம், 6 இதர அறைகளும், கருத்தரங்க அறை ஒன்று ஆகியவைகளுடன் 43,324 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளத்துடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட கல்லூரிக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதி களும் இந்த கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ளது.

இன்று (25.08.2025), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக இந்த கல்லூரி கட்டிடத்தினை திறந்து வைக்கிறார்.

நிகழ்வில் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்களும், கல்வியாளர்களும், பொதுமக்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

## முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலக்குண்டு கிழக்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



ஆண்டிமடம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



செங்கம் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



அனக்காவூர் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



பாலக்கோடு மத்திய ஒன்றியம்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



கன்னங்குறிச்சி பேரூர்,
சேலம் மத்திய மாவட்டம்.



மானாமதுரை நகரம்,
சிவகங்கை மாவட்டம்.



இராஜபாளையம் தெற்கு ஒன்றியம்,
விருதுநகர் தெற்கு மாவட்டம்.



களக்காடு வடக்கு ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.